கனம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்

முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

2025–ம் ஆண்டு மார்ச் மாதம் 21ம் நாள், வெள்ளிக்கிழமை
இடைநிலை மனு எண்.383/2018
இன்
அசல் வழக்கு எண்.90/2018
* * * *

1. சின்னம்மாள்
2. ராணியம்மாள் ... மனுதாரர்கள்/வாதிகள்

/ எதிர்/

ஷீலாதேவி ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது 13.03.2025–ல் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.தனபாண்டியன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.N.நமச்சிவாயம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிற்கும் வாதுரைகளுக்கு போதிய வாய்ப்பளித்தும், மனு, எதிருரை மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## உத்தரவு

தாவாச்சொத்தை பொறுத்து மனுதாரர்கள்/வாதிகளின் அமைதியான அனுபவம் மற்றும் சுவாதீனத்தை இந்நிர் எதிர்மனுதாரர்/பிரதிவாதி எவ்வித இடைஞ்சலும் செய்யாதிருக்கும் பொருட்டு எதிர்மனுதாரர்/பிரதிவாதி மீது ஒரு தற்காலிக தடையுத்தரவு பரிகாரம் வழங்ககோரியும், அதே காரணத்திற்காக ஒருதலைபட்சமாக ஒரு இடைக்கால தடை உத்தரவு பரிகாரம் ஒருதலைபட்சமாக இம்மனு முடியும் வரை பிறப்பிக்க வேண்டியும், உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1, 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ் மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதா? இல்லையா? என்தேயாகும்.**

1.1) மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவினை பரிசீலினை செய்ததில், தாவாச்சொத்தை பொறுத்து மனுதாரர்கள்/வாதிகளின் அமைதியான அனுபவத்தையும், சுவாதீனத்தையும் இந்நிர் எதிர்மனுதாரர்/பிரதிவாதி எவ்வித இடைஞ்சலும் செய்யாதிருக்கும் பொருட்டு எதிர்மனுதாரர்/பிரதிவாதி மீது ஒரு தற்காலிக தடையுத்தரவு பரிகாரம் வழங்ககோரியும், அதே காரணத்திற்காக

ஒருதலைபட்சமாக ஒரு இடைக்கால தடை உத்தரவு பரிகாரம் ஒருதலைபட்சமாக இம்மனு முடியும் வரை பிறப்பிக்க வேண்டியும் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில், அசல் வழக்கில் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை இம்மனுவில் எதிருரையாக பாவித்து கொள்ளவேண்டி குறிப்பாணை தாக்கல் செய்துள்ளார்.

**<u>3. தீர்வு</u>**

இருதரப்பிற்கும் வாதுரை கேட்கபட்டது. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்களோ, ஆவண சாட்சியங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை. கட்டளை 39 விதி 1, 2 CPC கீழ் மனுதாரர் நிவாரணம் பெற

(i) மனுதாரரின் வழக்கிற்கு முதற்தோற்ற வழக்கு இருக்கவேண்டும்.

(ii) மேற்படி நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்காவிட்டால் கட்டளை 39 விதி 1,2ன் கீழ் மனு தாக்கல் செய்யும் மனுதாரருக்கு பணத்தால் ஈடு செய்ய முடியாத இழப்பும் துன்பமும் ஏற்படும் என்றும், Balance of convenience என்ற நிபந்தனையானது மனுதாரருக்கு

ஆதரவாக உள்ளது என்றும் நிருபணம் செய்யவேண்டியது சட்டப்படி அவசியமானதாகும். ஆனால், இம்மனுவில் மேற்படியான நிபந்தனைகளை நிரூபணம் செய்யும் விதமாக மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் மேற்படி நிபந்தனைகளை நிறைவேற்றும்பொருட்டு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

3.1) மேலும், மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கின் பரிகாரமானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரமாகவே உள்ள நிலையில், மேற்படி இம்மனுவினை அனுமதிக்காததால் மனுதாரர்கள்/வாதிகளுக்கு பணத்தால் ஈடுசெய்ய முடியாத இழப்பு ஏற்படும் என்று சாட்சியங்கள் மூலமோ, ஆவண சாட்சியங்கள் மூலமாகவோ நிரூபணம் செய்யாததாலும், அசல் வழக்கில் தீர்வு காணவேண்டிய பிரச்சனையும், இம்மனுவில் தீர்க்க வேண்டிய பிரச்சனையும் ஒன்றாகவே இருக்கும் காரணத்தாலும், வழக்குச்சொத்தை பொறுத்து மனுதாரர்/வாதிக்கு தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா என்பது அசல் வழக்கில் இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் செய்து அதன் அடிப்படையில் முழு விசாரணைக்கு பின்பு தான் தீர்வு காண இயலும் என்பதாலும், மேற்படி காரணங்களை கருத்தில் கொண்டு இம்மனுவானது இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,** மனுதாரர்கள்/வாதிகள் கோரியுள்ள இடைக்கால தடையுத்தரவு பரிகாரம் மனுதாரர்களுக்கு கிடைக்ககூடியது அல்ல என்று இம்மனுவானது தள்ளுபடி செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2025ம் ஆண்டு மார்ச் மாதம் 21ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.03.21 18:39:44 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

**இணைப்பு:**

**இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :** இல்லை

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.03.21 18:39:50 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.383/2018
இன்
அசல் வழக்கு எண்.90/2018
வரைவு/செவ்வை உத்தரவு
நாள்: 21.03.2025